# 1. சுற்றுலா என்பது என்ன?

சுற்றுலா பற்றி விளக்கம் அளிக்கும் போது பல்வேறு கருத்துகள் எழுகின்றன. சுற்றுலா என்பது, **''சந்தோஷத்தைத் தேடி, வசிக்கும் இடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்குச் சென்று வருவது''** என்பது பொதுவான விளக்கமாகும்.

சுற்றுலா பற்றிய விளக்கம் பெறுவதற்கு முன்னர் அதன் முக்கிய அம்சமாகிய சுற்றுலாப் பயணி என்பவர் யார் என்பதை அறிந்து கொள்ளுதல் அவசியம்.

## 1.1. சுற்றுலாப் பயணி என்பவர் யார்?

சுற்றுலாப் பயணி என்ற வார்த்தையின் மூலச் சொல் சுமார் 1292-இல் கையாளப்பட்டது. ''டோர்னஸ்' (Tornus) என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து பிறந்தது தான் 'டூர்' (Tour) என்ற ஆங்கிலச் சொல். வட்ட சுழற்சியை விவரிப்பதற்கான உபகரணம் என்பது இதன் பொருள். 17-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஓர் இடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்குச் செல்வதையும், ஏதோ ஒரு காரணம் பற்றிப் பயணம் செய்வதையும், நாட்டின் முக்கிய நகரங்களைச் சுற்றிப் பார்ப்பதையும் குறிக்கும் ஒரு சொல்லாக அது உபயோகப்படுத்தப்பட்டது.

19-ஆம் நூற்றாண்டில் சுற்றுலாப் பயணி என்னும் வார்த்தைக்கு, 'பயணத்தில் ஏற்படும் சந்தோஷத்திற்காகவும் புதியவற்றைப் பற்றி அறிய வேண்டும் என்கிற ஆவலுக்காகவும் பயணம் மேற்கொள்வோர்' என்று பொருள் கொள்ளப்பட்டது.

எனினும் சந்தோஷத்திற்காகப் பயணம் மேற்கொள்வோர், சுற்றுலாப் பயணி என விளக்குவது தற்காலத்தில் ஏற்பட்ட ஒன்று.

சர்வதேச சங்கம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி யார் என்பதற்கு விளக்கம் கொடுத்துள்ளது. வழக்கமாக, தான் வசிக்கும் நாட்டை விட்டு வேறு ஒரு நாட்டிற்குச் சென்று, அங்கே குறைந்த பட்சம் 24 மணி நேரமாவது தங்கியிருக்கும் ஒருவரை - **'வெளிநாட்டுப் பயணி'** என்று சொல்கிறது. இந்த வரையறை கீழ்க் கண்ட அம்சங்களை உள்ளடக்கியது.

1. மகிழ்ச்சிக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் செய்யும பயணம்.
2. கூட்டங்களில் கலந்து கொள்வதற்குச் செல்வது.
3. வியாபார விஷயமாகப் பயணம் மேற்கொள்வது.

கீழே குறிப்பிட்டவர்களைச் சுற்றுலாப் பயணி என்று ஒத்துக் கொள்ளலாகாது.

(a) ஒரு நாட்டிற்கு நிரந்தரமாகக் குடியேறுவதற்காக வருபவர்கள்.

(b) வேலை மாற்றம் காரணமாக வேறு இடம் நோக்கிச் செல்லும் பயணிகள்.

(c) பள்ளி விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்கள்.

(d) எல்லைப்புறத்தில் வசிப்பவர்கள்.

(e) ஒரு நாட்டில் தங்கியிருந்து, அண்டையிலிருக்கும் நாட்டிற்காக வேலை பார்ப்பவர்கள்.

(f) ஒரு நாட்டைக் கடந்து அங்குத் தங்காமலேயே மற்றொரு நாட்டிற்குப் பயணம் செய்பவர்கள்.

மேற்கூறப்பட்ட சுற்றுலாக் கோட்பாடு 1945-இல் ஐ.நா. சபையில் உறுதிப்படுத்தப்பட்டது. மேலும் அது குறிப்பிடுகையில் சுற்றுலாப் பயணி என்பவர் வெளிநாட்டில் 24 மணி நேரத்திற்கு அதிகமாகவும் 6 மாதத்திற்குக் குறைவாகவும் தங்குபவர் என்கிறது.

1963-இல் ரோமில் ஐ.நா. சபையால் கூட்டப்பட்ட சுற்றுலா மாநாட்டில் சுற்றுலாப் பயணி என்பவர் யார் என்று விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

தற்காலிகமாகத் தன் இருப்பிடத்தை விட்டு வேறு நாட்டிற்குச் சென்று அந்த நாட்டில் குறைந்தபட்சம் 24 மணி நேரமாவது தங்கியிருப்பவரும், கீழ்க் கண்ட நோக்கங்களுள் ஏதேனும் ஒன்றுக்காகப் பயணம் மேற்கொள்பவரும் சுற்றுலாப் பயணி எனப்படுகிறார்.

(அ) பொழுதுபோக்கு (விடுமுறை, உடல்நலம், கல்வி, சமயம், விளையாட்டு)

(ஆ) வர்த்தகம், குடும்பம்.

ரோமில் நடந்த பன்னாட்டுச் சுற்றுலா மாநாட்டுப் பரிந்துரையின் அடிப்படையில் இந்திய அரசாங்கச் சுற்றுலாத்துறை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி என்பவர் யார் என்று வரையறை செய்துள்ளது.

1. பொழுதுபோக்கு (விடுமுறை, ஆரோக்கியம், கல்வி, மதம், விளையாட்டு)
2. வர்த்தகம், குடும்பம், அறநிலை.

இவற்றுள் ஏதேனும் ஒரு காரணம் குறித்து இந்தியா வந்து குறைந்த பட்சம் 24 மணி நேரம் இந்தியாவில் தங்கியிருக்கும் வெளிநாட்டுக்காரர் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி ஆவார்.

கீழ்க்கண்டவர்களை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி என்று இந்தியச் சுற்றுலாத்துறை அங்கீகரிப்பதில்லை. அவர்கள்

1 வேலையில் சேர வருபவர்கள்.

2. இந்தியாவில் நிரந்தர குடி அமர்வதற்காக வருபவர்கள்.

3. 24 மணி நேரத்திற்குக் குறைவாக இந்தியாவில் தங்கும் பயணிகள்.

மேலும்

a) பாகிஸ்தானிகள், பங்களா தேஷ் மக்கள்.

b) தரைமார்க்கமாக இந்தியா வரும் நேபாளிகள்.

c) பூடான் வழியாகத் தரைமார்க்கமாக இந்தியா வரும் வெளிநாட்டுக் காரர்கள்.

L.J. லிக்கோரிஷ் கருத்துப்படி சுற்றுலா என்பது அன்றாட வேலை, வேற்று நாட்டில் குடி பெயர்தல், இது தவிர மற்ற நோக்கங்களுக்காக மக்கள் இடம் விட்டு இடம் செல்வது. அநேகமாக பலர் விடுமுறையில் தான் வேறு இடம் செல்கின்றனர். இது தவிர மாநாடுகளில் கலந்து கொள்ளவும் வியாபாரத் தொடர்பாகவும் செல்வோரும் இதில் அடங்குவர்.

### 1.2-சுற்றுலாக் கோட்பாடுகள்:

சுற்றுலாக் கோட்பாட்டின் சுருக்கம் மாத்திஸன் வால் என்பவர் எழுதிய புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. அதன் படி சுற்றுலா என்பது மக்கள் தமது வழக்கமான இருப்பிடத்தை விட்டு தற்காலிகமாக வேறு இடத்திற்குச் செல்வதும், சென்ற இடத்தில் அவர்களின் செயல்பாடுகளும், அவர்களது தேவையைப் பூர்த்தி செய்ய செய்ய மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகளும் ஆகும்.

சுற்றுலாக் கல்வி என்பது வேறு இடம் தேடி வந்து மக்களைப் பற்றித் தெரிந்து கொள்வதாகும். அத்துடன் பயணிகளின் தேவைக்கேற்ற வசதிகள் செய்து தருதல், சுற்றுலாப் பயணிகளால் அங்கு வாழும் மக்களின் பொருளாதாரம், சமுதாயம் இவற்றில் ஏற்படும் தாக்கங்கள், அம் மக்கள் பயணிகளுடன் ஒத்துப் போகும் தன்மை, புதிய இடம் சுற்றுலாப் பயணிகளின் மேல் ஏற்படுத்தும் பாதிப்பு, பயணிகளின் நோக்கம், அவர்களின் அனுபவம், சுற்றுலாத் துறையில் அவர்கள் பங்கு ஆகியவற்றை அறிவதும் ஆகும்.

மாக்கேனலஸ் (Mac Cannells) கோட்பாட்டைச் சொல்லாமல் சுற்றுலாக் கோட்பாடு முற்றுப் பெறாது. அவர் கருத்துப்படி புது அனுபவங்களைப் பெறுவதற்காக உலகம் முழுவதும் சுற்றும் ஒரு மனிதன் தான் சுற்றுலாப் பயணி. சுருக்கமாகக் கூறின் சுற்றுலா என்பது கீழ்க்கண்ட இயல்புகளைப் பெற்றிருக்கிறது.

1. பல்வேறு நோக்கங்களைக் கொண்டது.
2. பணம் சம்பாதிக்கும் நோக்கத்திற்காகச் செல்வது அன்று.
3. வழக்கமான வசிப்பிடத்தை விட்டு வேறு இடம் செல்வது.
4. அங்கு நிரந்தரமாகத் தங்குதல் கூடாது.
5. தங்குதல் மீளுதல் என்ற வரையறைக்குள் இருக்க வேண்டும்.
6. போக்குவரத்து வாகனம், சுற்றுலா மையம், தங்குமிடம் என்ற மூன்று அடிப்படைக் கூறுகளைக் கொண்டிருக்கிறது.